


- வாழ்வோம்

பெரியார் பெயரில் அறிவுலகம் மற்றும் நூலகத்தை அவர் பிறந்த மேற்கு மாவட்டங்களின் முக்கிய நகரங்களில் ஒன்றான கோவையில் நிறுவியிருப்பது பொருத்தமானதாகும் என சமூக வலைதளத்தில் கருத்து பகிர்ந்துள்ளார், ஆவணப்பட இயக்குநர் பி.ஆர்.அமுதன். அவரது பதிவிலிருந்து... "பெரியார், வள்ளுவரைப் போல இந்த உலகிற்கே பொதுவானவர் என்றாலும் தமிழ்நாட்டில் அவர் பெயரில் இவ்வளவு பெரிய நூலகத்தை அமைப்பதற்கு கோவையே சரியான நகரமாகும். ஏனெனில், கோவை மிகுந்த வேகத்தில் வளர்ந்துவருகிறது. பொருளாதாரரீதியாக தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாகக் கருதப்படுகிறது. பிற மாநிலத்தவர்களின் இருப்பும், தொழில், வேலைவாய்ப்பு என அதிகரித்துவருகிறது. மலையாளிகளுக்கும் இந்தியாவின் பிற பகுதிகளுக்குச் செல்லும் நுழைவாயிலாகவும் கோவை உள்ளது.

இங்கு, இத்தகையப் பிரம்மாண்டமான அறிவுலகம் மற்றும் நூலகம் இருப்பது பணம், பக்தி, உணவு, நுகர்வு என்று மினி குஜராத்தாக உருவெடுத்திருக்கும் கோவை குடிமக்களுக்குப் பெரிய அறச் சவாலாக உருவெடுக்கும்.

சமத்துவம் பரப்பும் பெரியார் அறிவுலகம்!

சங்கிகள், ஜக்கி போன்றோரின் 'நம்பிக்கைப் பிடியில்' சிக்கித் தவிக்கும் கோவை மக்களுக்கு, அறிவுலகம் என்ற வார்த்தை பெரும் முரணாக இருக்கும்.

இவ்வளவு பெரிய நூலகத்தை இலவசமாக, எல்லோருக்குமான இடமாக உருவாக்கியிருப்பது, மேற்கு மாவட்ட முதலாளிகளுக்கும் ஜாதியவாதிகளுக்கும் பெரும் சோதனையாகவும் இருக்கும். இவ்வளவு பெரிய, விலை உயர்ந்த, குளிரூட்டப்பட்ட நூலகத்திற்கு எல்லோரும் போகலாமா? அதுவும் சமத்துவமாகவா? என்ன அநியாயம்! அபச்சாரம்! ஏற்கெனவே, சீமான் போன்ற நாஜிக்கள் புதிய நூலகங்களில் இளைஞர்கள் படிக்கவில்லை.. மாறாக, காதலிக்கிறார்கள் எனக் கதை விட்டார்கள். சூத்திரப் பெண்கள், தலித் ஆண்களிடம் இங்கு பழகிவிடுவார்களோ என்று பயந்து, கோயில்களில் கும்மிப்பாட்டு நடத்தி, சாதித் தலைவர்கள் தங்கள் பெண்களிடம் சத்தியம் வாங்கலாம். சமத்துவமும் அறிவும், ஜனநாயகமும் இந்த சொகுசானவர்களை என்ன பாடுபடுத்தப்போகிறது என்பதை நாம் பொருத்திருந்து பார்க்கலாம்"என்கிறார்.

தமிழ்நாடும் தண்ணீர் பண்பாடும்!



கௌதம் ராஜ்

படிப்பறை 136

சுயமரியாதை - சமத்துவம் - சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...

சூழலியல் எழுத்தாளர் நக்கீரன் அவர்களின் 'நீர் எழுத்து' - தமிழகத்தின் நீர் நிலைகளில் தொடங்கி சங்ககால இலக்கியத்தில் இடம்பெற்ற நீர் பற்றிய பாடல்கள், நீர்நிலைகளின் கட்டுமானம், நீருக்கும் அதிகாரத்திற்கும் இருக்கும் உறவு, நீர் தனியுடைமையா பொதுவுடைமையா, எதிர்காலத்தில் நீர் சிக்கலை எப்படித் தீர்ப்பது, நதிநீர் இணைப்பு சாத்தியமா? போன்ற தலைப்புகளில் நீரின் அரசியலைப் போதிய ஆதாரங்களோடு பேசுகிறது. காடோடி பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

திராவிடப் பண்பாடே நீரோடு தொடர்புடையது. வடக்கே இருப்பது போல் இங்கு வருடம் முழுக்க ஓடும் வற்றாத நதிகள் இல்லை. நீர் சேமிப்பின் அவசியத்தை மக்களின் வாழ்வியலோடு சேர்த்தே புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. "ஊரில் மழை பெய்ததா?" "விளைச்சல் எல்லாம் எப்படி?" என்ற அன்றாடம் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பின்னல், தமிழக நீர்ப் பண்பாட்டின் வரலாறு நீள்கிறது.

ஆரியம், நெருப்போடு தொடர்புடைய பழக்கவழக்கங்களைக் கொண்டிருந்ததற்கு அதன் சூழல் முக்கிய காரணம். அதைப் போலவே திராவிட நாகரிகம் நீரோடு பின்னிப் பிணைந்தது. நீர் சம்பந்தப்பட்ட சொற்கள் சங்க இலக்கியத்தில் தேடினால் வியக்கும் அளவுக்கு இடம்பெற்றுள்ளன என்பதிலிருந்தே அறியலாம்.

திராவிட நிலப்பரப்பு என எடுத்துக்கொண்டால், இங்கு நீரினைச் சேமித்துவைக்கும் குளம், குட்டை, ஏரி என நீர் சேமிக்கும் இடங்களும் அதிகம்.

திராவிட - ஆரிய போர், இதன் அடிப்படையில் நடைபெற்ற ஒன்று என்று சொல்கிறார், நூல் ஆசிரியர். மேய்ச்சல் நிலங்களை நம்பி கால்நடைகளை வளர்த்த ஆரியர்களுக்கு, அணை அமைத்து நீர் சேமித்த திராவிடர்களின் நிலவியல் அமைப்பு முரண்பட்டு நிறைந்த ஒன்றாகவே இருந்திருக்கும் என்கிறார்.

இந்தியாவில்தான் நீரை அணுகக்கூட தீண்டாமை இருந்தது. அம்பேத்கர் அதற்காக ஒரு சத்தியாகிரகப் போராட்டமே நடத்தினார். ஆரியத்தின் பண்புகளைத் தமிழ் அரசர்கள் கடைப்பிடித்தபோது, தண்ணீர் தனியுடைமையானது. சாதிக்கு ஒரு குளம் ஏற்பட்டதெல்லாம் அதன் பிறகான ஒன்றுதான்.

தமிழ்நாட்டில் இடம்பெற்றுள்ள ஆறுகள், குளங்கள், ஏரிகள், அணைகள் போன்றவற்றை இந்நூல் வரலாற்றுரீதியாக ஆழமாக ஆராய்கிறது. ஆறுகளின் கலப்படப் பெயர்கள் நீக்கப்பட்டு, உண்மையான பெயர்க் காரணங்களை அடையாளம் காட்டுகிறார். பழங்கால காவிரி ஓடிய பாதைகளைப் பற்றிய செய்தி இடம்பெற்றுள்ளது. வைகை, பொருநை, பாலாறு என்று ஆறுகள் பற்றிய புதிய செய்திகள் இந்நூலின் மதிப்பை மேலும் கூடுகின்றன.

ஏரிகள் நிறைந்த சென்னையும், 1920-இல் இயற்றப்பட்ட 'மெட்ராஸ் டவுன் பிளானிங்' சட்டமும் பனகல் பூங்கா பெயர்க் காரணமும், வாக்கம் - பாக்கம் என்று இடம்பெற்ற ஊர்ப் பெயர்களும் சென்னையின் நீர் வரலாற்றைக் கண் முன் நிறுத்துகின்றன.

நூலின் பின் இணைப்பாக, 'தமிழ்நாட்டின் நீர்க் கொள்கைக்கான 20 பரிந்துரைகளை'க் கூறியுள்ளார். தண்ணீருக்கென தனித் துறை என்பதில் தொடங்கி, சூழலியல் சார்ந்த பல பரிந்துரைகள் இடம்பெற்றுள்ளன. மழைக் காலத்தில் நீரின் அவசியத்தை அறிய, நீர் அரசியலை வாசிப்போம்!

கழகம் வெல்லும்! காலம் சொல்லும்!



பிரசன்னா ராமசுப்பிரமணியன், மதுரை.

இந்தியாவில் 77 ஆண்டுகள் கடந்த மிக மிக வலிமையான சித்தாந்தம் உள்ள ஒரு மாநிலக் கட்சி தி.மு.க. என்றபோதிலும் தேர்தல்களில் நாம் ஏன் தனித்து நிற்பதில்லை?

தேர்தல் களம் என்பது சித்தாந்தங்களுக்கு மட்டுமேயான வெற்றியல்ல. பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையிலான வெற்றி. தி.மு.க.வின் சித்தாந்தம், அதாவது கொள்கைத் தத்துவம் என்பது சமூக நீதியின் அடிப்படையிலானது. சமூக நீதி என்பது காலம் காலமாக நிலவும் சாதிரீதியான, பாலினரீதியான, மொழிரீதியான இன்னும் பல வகை ஒடுக்குமுறைகளுக்கு எதிரான உரிமையை நிலைநாட்டும் தொடர் போராட்டம். இந்தியாவின் பெரும்பான்மை மக்கள், தங்கள் நம்பிக்கையின் அடிப்படையில் மட்டுமே கடைப்பிடித்துவரும் சில நடைமுறைகளுக்கு எதிரான குரலே சமூக நீதி. பெரும்பான்மை மக்களின் காலம் காலமான நடைமுறைகளில் தவறானவற்றை எதிர்த்துக் களமாடும் சித்தாந்தத்தைக் கொண்டுள்ள கட்சி, எப்படி தேர்தல் களத்தில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற முடியும்? இதனை உணர்ந்து அமைக்கும் வியூகம்தான் தி.மு.க. தலைமையிலான கூட்டணி. கொள்கைரீதியான கூட்டணியை அமைத்து, பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்று ஆட்சியமைத்து, பெரும்பான்மை மக்களும் ஏற்றுக்கொண்டு பயன் பெறும் வகையில் இந்தியாவில் வேறெந்த மாநிலங்களிலும் இல்லாத அளவுக்கு சமூக நீதியைச் செயல்படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழகம் தான்.

திராவிடன் பதில்கள் 05

மு.சந்தோஷ்குமார், சென்னை.

ரீல்ஸ் பார்க்கும் தலைமுறைகளுக்கு, தன் ரியாலிட்டியைக் கொண்டுசேர்க்கக் கழகம் தவறிவிட்டதா? தவிர்த்துவிட்டதா?

குழந்தைகளிடமும் இளம் தலைமுறையினரிடமும் ரீல்ஸ் மோகத்தை வளர்க்க வேண்டாம் என்று கழகம் தவிர்த்தது. ஆனால், குழந்தைகளையும் ரீல்ஸில் நடிக்கவைத்த கூட்டத்தால், தேர்தல் களத்தைக் கழகம் இந்த முறை தவறவிட்டது. ரியாலிட்டி என்ன என்பதைக்கூட நேரடியாகப் பார்த்துத் தெளிவதைவிட, விர்ச்சுவலாக - ஸ்பெஷல் எஃபெக்ட்ஸுடன் பார்த்தால்தான் புரியும் என்கிற தலைமுறை உருவாகியிருப்பதால், அந்தத் தொழில்நுட்பத்தையும் தவிர்க்காமல் கழகம் தன் செயல்பாடுகளைத் தொடரும்; தவறாமல் வெல்லும்.

முகிலன், மதுரை.

கேரளாவில் மார்க்சிஸ்ட் ஆட்சியும், தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியும் வீழ்த்தப்பட்டதற்கு இரண்டு ஆட்சிகளும் கார்ப்பரேட்டுகளை வலிந்து ஏற்றுக்கொண்டதுதான் காரணம் என்று பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியானது. தி.மு.க. கார்ப்பரேட் எதிர்ப்புக் கொள்கையைப் பின்பற்றவில்லையா?

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை தி.மு.க.வின் கொள்கை என்பது அனைத்து மக்களையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சி. 1970-களில் இந்தியாவில் கலப்புப் பொருளாதாரம் கடைப்பிடிக்கப்பட்ட சூழலில், தமிழ்நாட்டில் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களை அதிக அளவில் உருவாக்கினார் கலைஞர். அதன் மூலமாக தமிழ் நாட்டின் கிராமப்புறங்கள் உள்பட பல குடும்பங்களுக்கும் அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் வேலை கிடைத்தது. அதே கலைஞர் தலைமையில் 1996-இல் தி.மு.க. ஆட்சி அமைந்தது. அப்போது, இந்தியாவில் புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைக்கு வந்துவிட்டது. அதன் தாக்கத்தை உணர்ந்த கலைஞர், தமிழ்நாட்டுக்கு ஏற்ற வகையில் ஃபோர்டு, ஹூண்டாய், செயின்ட் கோபைன் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்த்தார். அந்த நிறுவனங்கள்மூலம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஏறுமுகத்திற்குச் சென்றது. திராவிட நாயகர் தலைமையிலான ஆட்சிக்காலத்தில் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் பன்னாட்டு நிறுவனங்களின் உற்பத்தி தொடங்கப்பட்டதால், அங்கு வேலைவாய்ப்பும் வளர்ச்சியும் பெருகின. கார்ப்பரேட்டுகளை வலிந்து ஏற்காமல், வளர்ச்சிக்கேற்ற வகையில் பயன்படுத்துவதே தி.மு.க.வின் நிலைப்பாடு. தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு என்பதைக் கொள்கை முடிவாகக் கொண்டு செயல்படுகிற இயக்கம்தான் தி.மு.க.

(திராவிடன் பதில்கள் பகுதிக்கு உடன்பிறப்புகள், வாசகர்கள் தங்கள் கேள்விகளை அனுப்பலாம். வாட்ஸ்ஆப் எண் - 82204 51520)

ஃப்ளாஷ்பேக்



இரா.காபிரிவேலு



என்றும் பெருமைதரும்!

2012ஆம் ஆண்டில், கழகத் தலைவர் தளபதி அவர்கள் விருதுநகர் மாவட்டத்திற்கு வருகைதந்தபோது, விருந்தினர் மாளிகையில் ஓய்வெடுத்த நேரத்தில், கழகத்தினரைச் சந்தித்தார். அப்போது எடுத்துக்கொண்ட படம். அன்று, சாத்தூர் ஒன்றிய ஆதிதிராவிடர் அணித் துணை அமைப்பாளராகக் கழகப் பணியாற்றினேன் . அதற்குப் பின், ஒன்றியப் பிரதிநிதி, ஒன்றிய மாணவர் அணித் துணை அமைப்பாளராகவும் பணியாற்றினேன். தலைவர் வழியில் கழகப் பணியாற்றுவதில் பெருமைகொள்கிறேன்.

- இரா.காபிரிவேலு,
சமத்துவபுரம் கிளைக் கழகச் செயலாளர்,
சாத்தூர் ஒன்றியம், விருதுநகர் மாவட்டம்.

இதுபோன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள்.
அலைபேசி எண் அவசியம். அனுப்பவேண்டிய முகவரி: அன்பகம், 614,
அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018
வாட்ஸ்அப் எண்: 82204-51520 மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900